# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.720/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சிலம்பன் | த–பெ | முத்து |
| ஊர்: | : | ஜெயங்கொண்டான் | சமயம்: | |
| வயது: | : | 50/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | பாத்திர வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் ஜெயங்கொண்டானில் வசித்து பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 ஐ யார் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி, அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ எனக்கு தெரியாது.
**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும் என்றும், அசா.1 சம்பவதினத்தன்று மாணிக்கம் என்பவர் வீட்டின் அருகில் வந்துகொண்டிருந்த போது எதிரிகள் அங்கு வந்து முன் விரோதத்தை மனதில் வைத்து அவரை வழி மறித்து அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி, பிரபாகரன் என்பவர் அவரது வீட்டில் இருந்த கோடாளியை எடுத்துக்கொண்டு அ.சா.1 ஐ தாக்கினார் என்றும் சம்பவத்தை நேரடியாக பாத்து தனது மனைவியிடம் சம்பவத்தை விலக்கி வைத்ததாக சொல்லிவிட்டு தற்பொழுது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.29 16:11:49 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி